# அறநிலையத்துறையின் அவசியம்! அயோத்தி ஊழலே சாட்சியம்!

‘தேடற்கரிய ஒப்புயர்வற்ற நமதருமைத் தலைவர்‘ எனத் தந்தை பெரியாரால் போற்றப்பட்டவர் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் சென்னை மாகாண முதல்அமைச்சராக இருந்தவருமான பானகல் அரசர் எனும் இராமராய நிங்கர். அவரது பிறந்தநாளான ஜூலை 9 அன்று கழகத் தலைவர் அவர்கள் இந்த வரிகளைக் குறிப்பிட்டு, பானகல் அரசரின் ஆட்சிக்கால சாதனைகளை நினைவுப்படுத்தி அறிக்கை பதிவிட்டிருந்தார்.

பானகல் அரசர் தலைமையிலான நீதிக்கட்சி ஆட்சியில் வகுப்புவாரி இடஒதுக்கீடு, பெண்களுக்கு வாக்குரிமை, சட்டமன்றத்தில் பெண்களுக்கானப் பிரதிநிதித்துவம் ஆகியவை முன்னெடுக்கப்பட்டதுடன், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. **மன்னர்களால் மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கானத் திருக்கோயில்களையும் அதற்கு சொந்தமான உடைமைகளையும் ஒரு சில பிரிவினரே காலம் காலமாக அனுபவித்து வந்த நிலையை மாற்றி, அவற்றை உரிய முறையில் கணக்கெடுத்துப் பராமரிப்பதற்காக நீதிக்கட்சி அரசால் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்.**

பானகல் அரசர் காலத்தில் நீதிக்கட்சி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட இந்து சமய அறநிலையப் பாதுகாப்பு சட்டம், பின்னர் சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியின் முதலமைச்சர்கள் ஓமந்தூர் இராமசாமியார், பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்காலங்களில் புதிய விதிகளும் இணைக்கப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறை உருவானது. முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் கோயில் அறங்காவலர் குழுக்களில் பட்டியல் இனத்தவர்களும் பெண்களும் இடம்பெறும் நிலை உருவானது.


**பிறப்பால் உயர்ந்த சாதியாகவும், பணத்தால் உயர்ந்த வர்க்கமாகவும் கருதிக் கொண்டிருந்தவர்களின் பிடியில் இருந்த திருக்கோயில் சொத்துகள், உரிய முறையில் அரசாங்கத்தின் பதிவேடுகளில் இடம்பெற்று, அவற்றின் கணக்கு வழக்குகள் உள்ளிட்ட நிர்வாகத்தினை இந்து சமய அறநிலையத்துறை கவனித்து வருகிறது. தமிழ்நாட்டில் 100 ஆண்டுகாலமாக நடைமுறையில் உள்ள அறநிலையப் பாதுகாப்பினை மதவாத அரசியல்வாதிகளும் அவர்களின் பரிவாரங்களும் விரும்புவதில்லை.** தங்களின் அதிகாரம் பறிபோனதாக அவர்கள் நினைப்பதால், அறநிலையத்துறையிடமிருந்து கோயில்களை எடுத்துவிட்டு, அதனைத் தாங்கள் விரும்பும் அமைப்புகளிடமோ தனியாரிடமோ வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களின் தொடர்ச்சியான நிலைப்பாடாகவும் தேர்தல் அறிக்கையின் வாக்குறுதியாகவும் உள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. என ஆட்சிகள் மாறியபோதும் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ்தான் திருக்கோயில்களின் நிர்வாகம் இருந்து வருகிறது. கோயில் திருப்பணிகள், குடமுழுக்கு, திருவிழாக்கள் ஆகியவற்றை அறநிலையத்துறை மேற்கொள்கிறது. அன்னதானக் கூடம், திருமண மண்டபம், கல்லூரிகள், கருணை இல்லங்கள் ஆகியவையும் அறநிலையத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் நிர்வாக நடவடிக்கைகள்தான். கோயிலின் ஆகம முறைகள், வழிபாட்டுத் தன்மைகள், உற்சவத்திற்கு உகந்த நாட்கள் போன்ற ஆன்மிக நம்பிக்கைக்குரியவற்றில் அறநிலையத்துறை தலையிடுவதில்லை.

**2021-26 திராவிட மாடல் ஆட்சியில் ஏறத்தாழ 4000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றதுடன், பழமையான கோயில்களின் புனரமைப்புக்கானத் திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. பல வகை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து 8,107 ஏக்கர் கோயில் நிலங்களை அறநிலையத்துறை மீட்டது. இதன் மதிப்பு ரூ.8,435 கோடியாகும். கோயில் நில ஆக்கிரமிப்பு மோசடியில் ஆர்.எஸ்.எஸ்-பா.ஜ.க ஆதரவாளர்கள் பலர் ஈடுபட்டிருந்ததும் அம்பலமானது.**

திருக்கோயில்களை அறநிலையத்துறையிடமிருந்து எடுத்து தனிப்பட்ட அமைப்புகளிடம் வழங்கவேண்டும் என்றும், அரசாங்கத்திற்குப் பதில் இந்து மதத்தைச் சேர்ந்த அமைப்புகள்தான் கோயில்களை நிர்வகிக்க வேண்டும் என்றும் மதவாத அரசியல் அடிப்படையில் தொடர்ந்து குரல் எழுப்புகிறவர்கள் எதற்காக அப்படிச் சொல்கிறார்கள் என்பதற்கான உண்மையான காரணத்தை அயோத்தி இராமர் கோயில் நிதி வசூல் விவகாரமும், காணிக்கைத் திருட்டும் அம்பலப்படுத்தியுள்ளன.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில், இராமர் கோயில் கட்டுவதற்கு உச்சநீதிமன்றம் அனுமதியளித்த நிலையில், கோயில் கட்டும் பணிகளுக்காக ஸ்ரீராம ஜென்ம பூமி தீர்த்த சேஷ்ஸ்தரா டிரஸ்ட் எனும் அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளையைத் தொடங்கி வைத்தவர் பிரதமர் நரேந்திர மோடி. இந்த அறக்கட்டளையின் பொதுச் செயலாளராக சம்பட் ராய் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். அறக்கட்டளையில் பொறுப்பில் இருப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள். உத்தரபிரதேச மாநில பா.ஜ.க. முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் இராமர் கோயில் கட்டும் பணியில் தொடர்புடையவர். அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பணியைத் தொடங்கி வைத்தவர் பிரதமர் மோடி. கோயில் கட்டி முடிக்கப்பட்டதும் அதனைத் திறந்து வைக்கும் விழாவிலும் அவரே முதன்மையாக இருந்தார்.



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

**இந்து மதத்தின் பாதுகாவலர்கள் நாங்கள்தான் என்று சொல்லிக் கொண்டு, ‘ஜெய் ஸ்ரீராம்’ கோஷம் போடும் அமைப்பினர், அயோத்தியில் கோயில் நிதியை சுரண்டி, இராமருக்கு நாமம் போட்டிருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் நாமம் அல்ல, 200 கோடி ரூபாய் மதிப்புள்ள மோசடி நாமத்தைப் போட்டிருக்கிறார்கள்.** இராமர் கோயில் கட்டுவதற்காக உலகெங்கும் உள்ள இந்துக்களிடம் நிதி வசூல் செய்யப்பட்டது. இந்தியாவில் உள்ள பக்தர்களும் வாரி வழங்கினார்கள். ஏழைகள் கூட தங்களின் உண்மையான பக்தியின் காரணமாக, அயோத்தி இராமர் கோயிலுக்கு தங்களிடமிருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றைக் காணிக்கையாக வழங்கினர். பணக்காரர்கள் இலட்சக் கணக்கில் பணமும், வைரம் உள்ளிட்ட நவரத்தினங்களையும் வழங்கினர். இந்த காணிக்கைகள் களவு போயிருப்பதாக புகார் எழுந்தது.

இராமர் கோயிலை நிர்வகிக்கும் ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த சேஷ்ஸ்தரா அறக்கட்டளையின் நிர்வாக ஊழல்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என உத்தர பிரதேசத்தில் உள்ள இராம பக்தர்களும், அரசியல் கட்சிகளும் குரல் எழுப்பின. ஒன்றிய உள்துறையின் முன்னாள் செயலாளர் ஒருவர், இராமர் கோயிலுக்கு காணிக்கையாக அளித்த தன்னுடைய தங்க இராமாயணப் புத்தகம் பற்றியும் புகார் தெரிவித்திருந்தார். இதன் காரணமாக உத்தரபிரதேசத்தை ஆளும் பா.ஜ.க.வின் முதல்வர் ஆதித்யநாத் ஒரு சிறப்பு புலனாய்வுக் குழுவை (எஸ்.ஐ.டி) அமைத்தார்.

**எஸ்.ஐ.டி. விசாரணையில் காணிக்கைத் திருட்டு நடந்திருப்பதும், நில மோசடிகளும் கண்டறியப்பட்டன. 180 நாட்களுக்குப் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டிய சி.சி.டி.வி. கேமரா பதிவுகளில் 45 நாட்களுக்கானப் பதிவுகள் மட்டுமே இருந்தன. மற்றவை அழிக்கப்பட்டுவிட்டன. இந்தப் பதிவுகளை ஆராய்ந்ததில் 40 நாட்களில் 70 திருட்டு வேலைகள் நடந்திருப்பது தெரிய வந்துள்ளது. ஸ்ரீராம ஜென்மபூமி டிரஸ்ட் நிர்வாகம் போலி ரசீதுகள் போட்டிருப்பதும் கண்டறியப்பட்டது.**

காணிக்கைத் திருட்டு தொடர்பான எஸ்.ஐ.டி.யின் விசாரணையைத் தொடர்ந்து, பெயரளவுக்கு சிலரைக் கைது செய்தது உத்தரபிரதேச பா.ஜ.க. அரசு. அவர்களில் பலர், கோயில் காணிக்கையை எண்ணக்கூடிய வேலையைப் பார்ப்பவர்கள்தான். அவர்களிடமிருந்து 80 இலட்ச ரூபாய் பறிமுதல் செய்திருப்பதாக எஸ்.ஐ.டியின் அறிக்கை தெரிவிக்கிறது. 200 கோடி ஊழலில் 80 இலட்சத்தைக் கண்டறிந்துவிட்டதாக காலரைத் தூக்கி விட்டுக் கொள்கிறது உத்தரபிரதேச அரசு நிர்வாகம். இது, உண்மையான குற்றவாளிகளைத் தப்ப வைப்பதற்காக நடத்தப்படும் நாடகம் என்பதை அரசியல் கட்சிகளும் பொதுநல அமைப்புகளும் ஆதாரங்களுடன் முன்வைக்கின்றன.

**இராமஜென்மபூமி அறக்கட்டளைக்கு வந்து குவிந்த நிதி மூலமாக விவசாய நிலங்கள் வாங்கப்பட்டன. “கோயிலுக்காக என்று சொல்லி எங்களிடம் மிகக் குறைந்த விலைக்கு வாங்கிய நிலங்களை, கார்ப்பரேட் நிறுவனங்கள் உள்ளிட்ட தனியாரிடம் அதிக விலைக்கு விற்கிறது ராமஜென்மபூமி டிரஸ்ட்” என்று விவசாயிகள் சங்கத்தினர் செய்தியாளர்கள் சந்திப்பில் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்கள்.**

பக்தர்கள் அளித்த காணிக்கை, விவசாயிகளிடமிருந்து வாங்கிய நிலம், கோயிலுக்கு சொந்தமான சிலைகள் எனப் பலவும் ஸ்ரீராமஜென்ம பூமி தீர்த்த சேஷ்ஸ்தரா அறக்கட்டளையால் மோசடி செய்யப்பட்டுள்ளது. இராமர் பெயரில் நடத்தப்பட்டிருக்கும் இந்த மாபெரும் ஊழல் குறித்து பிரதமரோ அவரது கட்சி நிர்வாகிகளோ ஏன் வாய் திறக்கவில்லை என்றும், உச்சநீதிமன்ற அளவில் இந்த ஊழல் குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் பக்தர்கள் தரப்பில் வலியுறுத்தப்படுகிறது.

**தமிழ்நாட்டில் உள்ளது போன்ற அறநிலையத்துறை நிர்வாகத்திற்கு மாறாக, கோயில்களை தனியார் அமைப்பிடம் கொடுப்பதும், அதுவும் மதத்தின் பெயரை வைத்து அரசியல் செய்பவர்கள் கைகளில் கொடுப்பதும் எத்தகைய மோசடிக்கு வழிவகுக்கும் என்பதை இராமர் கோயில் விவகாரம் நிரூபித்துள்ளது. அறநிலையத்துறை ஏன் அவசியமானது என்பதற்கு அயோத்தி ஊழலே சாட்சியமாகியுள்ளது.**

திராவிட மாடல் ஆட்சியில் திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, கோயில் கணக்கில் சேர்த்ததற்கு மாறாக, தற்போது நடைபெறும் த.வெ.க ஆட்சியில் கோயில் சொத்துகளைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் மோசடிகள் தொடர்கின்றன. பழநி அடிவாரம் பூங்கா சாலையில் தண்டபாணி சுவாமிகள் மடத்திற்கு சொந்தமான 1.40 ஏக்கர் நிலம் 60 ஆண்டுகாலமாகத் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த நிலையில் உச்சநீதிமன்றம் வரை வழக்கு தொடரப்பட்டு, திராவிட மாடல் ஆட்சியில் 2025ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் நாள் அந்த நிலம் மீட்கப்பட்டு, நீதிமன்றங்களின் உத்தரவுப்படி தேவஸ்தானத்துடன் இணைக்கப்பட்டது. திருக்கோயில் நிலத்தைப் போராடி மீட்டு, ஓராண்டு கூட நிறைவடையாத நிலையில், த.வெ.க அரசு அதனை ஜூலை 2ஆம் நாள் தனிநபர்களுக்குப் பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளது.

**லஞ்ச ஊழல் இல்லாத ஆட்சி என பஞ்ச் வசனம் பேசுகிறார் விஜய். பழநியில் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள 1.40 ஏக்கர் கோயில் சொத்து, த.வெ.க. ஆட்சியில் பறிபோய் இருக்கிறது. மக்களை மட்டுமல்ல, கடவுளையும் ஏமாற்றும் மோசடி ஆட்சி தமிழ் நாட்டில் நடக்கிறது.**

## மாற்றுத்திறனாளியான சபரிவர்மனை – த.வெ.க. அரசின் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் சென்று கொன்றுள்ளது!

# 60 நாட்களில் 4 காவல்துறை மரணங்கள் - ரீல்ஸ் வேண்டாம்! நீதி வேண்டும்!

## கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அறிக்கை!

சென்னை, ஜூலை 16-

கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அளித்துள்ள பேட்டி வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டம் தென் தாமரைக்குளத்தைச் சேர்ந்த சபரிவர்மன் என்கின்ற ஒரு மாற்றுத்திறனாளி சகோதரரை படுகொலை செய்துள்ளது விஜய் அரசு. மாற்றம் என சொல்லி வந்த இந்த அரசில் பிண நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது.

கைது செய்யப்பட்ட ஒருவரை சிறையில் அடைப்பதற்கு முன், அவரை நீதித்துறை மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர்படுத்த வேண்டும். அதற்கு முன் மருத்துவ பரிசோதனை செய்து, “Medically fit to remand” என்ற சான்றிதழ் பெறப்பட வேண்டும். அந்த மருத்துவத் தகுதி சான்றிதழ் பெறப்பட்ட பிறகே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, பின்னர் சிறைக்கு அனுப்ப முடியும்.

**குடும்பத்தினர் பார்க்க அனுமதியில்லை!**

அவ்வாறு மருத்துவ ரீதியாக தகுதி உள்ளவர் என்ற சான்றிதழ் பெறப்பட்ட பிறகு, சபரிவர்மன் சிறைக்கு அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது. பத்தாம் தேதி வெள்ளிக்கிழமை அன்று குடும்பத்தினர் சிறைச்சாலைக்கு சென்று அவரை சந்தித்ததாகவும், அப்போது அவர் நலமுடன் இருந்ததாகவும், நன்றாக பேசிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், பதிமூன்றாம் தேதி, சிறைச்சாலை யிலிருந்து காவல்துறை மூலமாக குடும்பத்தினருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சபரிவர்மன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. மருத்துவமனைக்கு சென்ற குடும்பத்தினர் சபரிவர்மனை பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை. நீண்ட நேரம் காத்திருந்து வலியுறுத்திய பிறகு, அவர் பிணவரையில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளனர். அதன் பிறகுதான் அவர் உயிரிழந்துவிட்டார் என்ற தகவல் குடும்பத்தினருக்கு தெரிய வந்துள்ளது.

**“டைவெர்டிங் பாலிடிக்ஸ்”**

பத்தாம் தேதி நலமாக இருந்த சபரிவர்மன், பின்னர் மரணம் அடைந்ததாக காவல்துறை தெரிவித்ததைத் தொடர்ந்து, அந்த பகுதியில் குடும்பத்தினர் பெரிய அளவில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் சில ஊடகங்களில் மட்டும் வெளியாகி உள்ளது. அதே நேரத்தில், முதலமைச்சர் பெரம்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இந்த சம்பவத்திலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் நடந்து கொண்டார். இந்த அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து “டைவெர்டிங் பாலிடிக்ஸ்” மட்டுமே செய்து வருகிறது என்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறது.

இருநூறு கிராம் குட்கா வைத்திருந்த மாற்றுத்திறனாளி ஒருவரை அடித்துக் கொலை செய்துள்ளது காவல்துறை. ஆனால் அதே சமயம் 40 கோடி ரூபாய் குட்கா கம்பெனிகளிடம் லஞ்சமாக பெற்ற குட்கா விஜய்பாஸ்கரை சிவப்பு கம்பளம் விரித்து கட்சியில் இணைத்துக்கொண்டுள்ளது. இதுதான் இன்றைய விஜய் அரசின் மாற்றம்.



திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மடப்புரம் கோவில் காவலாளி அஜீத் குமார் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவத்தின் போது விஜய் மேடை போட்டு பேசினார்.

அப்போது நடந்த சம்பவத்திற்காக பொறுப்பேற்று அவர் குடும்பத்திடம் எங்களது தலைவர் மன்னிப்பு கேட்டார். ஆனால் அப்போது சாரி வேண்டாம் எங்களுக்கு நீதி வேண்டும் என பேசினார் விஜய். இன்று அவரைப் பார்த்து “ரீல்ஸ் வேண்டாம்; எங்களுக்கு நீதி வேண்டும்” என்று தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்.

அஜீத் குமார் கொலல்ப்பட்ட வழக்கில் காவல்துறை சம்மந்தப்பட்டு இருந்ததால் விமர்சனங்கள் ஏதும் எழ கூடாது என வழக்கை தானாக முன்வந்து CBI க்கு மாற்றி உத்தரவிட்ட எங்களது முதலமைச்சர் எங்கே, இன்று சபரிவர்மன் கொல்லப்பட்டதை கண்டும் காணாமல் ஓடு ஓடு என ஓடும் இவர் எங்கே.? இந்த அரசு பிரச்சனைகளை கண்டு ஓடுகிற மாடல் அரசா.? பிரச்சனை என்றால் பதுங்குகிற அரசா .? என்ற கேள்வி தமிழ் நாட்டு மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

இந்த த.வெ.க. அரசு பொறுப்பேற்ற 60 நாட்களில் மட்டும் இதுபோன்ற 4 சம்பவங்கள் நடந்துள்ளன.

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் வெங்கடேஷ் என்ற காவலாளி காவல்துறையால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பிறகு, மறுநாள் உயிரிழந்துள்ளார். திருச்சியில் ஸ்ரீராம் என்ற நபர் காவல்துறையால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் அவர் வீட்டில் தூக்கிட்டு உயிரிழந்ததுள்ளார். கிருஷ்ணகிரியில் 17 வயது சிறுவனுடன் காவல்துறை அதிகாரி ஒருவர் தகராறு செய்து, அவரது செல்போனை பறிமுதல் செய்ததால், அந்த சிறுவன் தற்கொலை செய்துகொண்டுள்ளார். தென்காசி அருகே சிவகிரியில், அந்தோணிராஜன் என்ற முதியவர் காவல்துறை விசாரணைக்கு அழைக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டதால் தற்கொலை செய்துகொண்டுள்ளர். இப்படி அறுபதே நாட்களில் காவல்துறையால் நான்கு மரணங்கள் நடந்துள்ளன.

**சட்டம் அனைவருக்கும் சமம்!**

“ஆளுக்கொரு நீதி ஆளுக்கொரு சட்டமா.? சட்டம் அனைவருக்கும் சமம்” ஆனால் இப்போது தவெக நிர்வாகிகளுக்கு ஒரு சட்டம் மற்றவர்களுக்கு வேறு ஒரு சட்டம் தான் நடைமுறையில் உள்ளது என்று பேச்சாளர் குற்றம்சாட்டுகிறார்.

ஈரோடு பவானியை சேர்ந்த அருண் என்ற தவெக நிர்வாகி 140 கிலோ குட்கா கடத்தியதா கைது செய்யபட்டார். அவர் ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன்பு குட்கா கடத்தி குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர். அப்படி இருக்கும் நபர் மீண்டும் கைது செய்யப்பட்ட போது அவரை உடனடியாக ஸ்டேஷன் ஜாமீனில் விடுவித்துள்ளனர் காரணம் அவர் தவெக நிர்வாகி. கரூர் குளித்தலை பகுதியில் ஒரு பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த தவெக ஒன்றிய செயலாளர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுமக்களே சென்று அவரை தண்டித்துள்ளனர். ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மீது விஜய் ரசிகர் மன்ற ரசிகையே புகார் கூறி உள்ளார் இதுவரை எந்த நவடிக்கையும் இல்லை. ஆனால் அந்த எம். எல். ஏ விற்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு கொடுத்துள்ளனர். அதேபோல திருப்பூரில் பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள கஞ்சா கடத்திய தவெக கட்சி நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளர். ஆனால் அவருக்கெல்லாம் எந்தவித டார்ச்சரும் இல்லை ஏன் என்றால் அவர் தவெக நிர்வாகி. ஆனால் சாதாரண மாற்றுத்திறனாளியை 200 கிராம் குட்கா வைத்திருந்ததாக கூறி விசாரணைக்கு அழைத்து சென்று கொலை செய்துள்ளது.

கடந்த எங்களது ஆட்சியில் இது போன்றதொரு சம்பவம் நடந்த போது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-ன் கீழ் வழக்கு பதிவு செய்தோம். இந்தியாவிலேயே முதல்முறையாக கொலை வழக்கு பதிந்து விசாரணை நடத்தியது எங்களது அரசு. ஆனால் இந்த அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிறைச்சாலையில் பணியாற்றிய ஜெயிலர் மற்றும் வார்டன்கள் ஜெகன், சிவக்குமார் ஆகியோர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

**உடல் எங்கும் காயம்!**

இன்று மாஜிஸ்திரேட் உடலைப் பார்த்தபோது அவரது உடலில் பல்வேறு காயங்கள் இருந்துள்ளன. அவரது கால்கள் கட்டப்பட்டிருந்தன, கைகளில் காயங்கள் இருந்தன, ஆண் உறுப்பில் காயம் இருந்தது, நெஞ்சுப் பகுதியில் காயம் இருந்தது என்று மாஜிஸ்திரேட் தனது அறிக்கையில் பதிவு செய்துள்ளார். அவர் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்ற பிறகு எவ்வாறு மரணம் அடைந்தார் என்பதற்கு இந்த அரசு இதுவரை தெளிவான விளக்கம் அளிக்கவில்லை. காவல்துறைக்கு பொறுப்பான முதலமைச்சர் விஜயும் இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை. அவருக்கே இந்த தகவல் தெரியுமா என்ற சந்தேகம் எழுகிறது. குதிரை பேரத்தில் ஈடுபட்டு குதிரைகளை விலைக்கு வாங்கும் விஜய் அரசாங்கத்திற்கு மனித உயிரின் மதிப்பு தெரியவில்லை. குற்றவாளி தவெக கட்சியை சார்ந்தவர் என்றால் ஜாமீன் மற்றவர்கள் என்றல் மரணம். இந்த வழக்கில் முறையான விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதில் தொடர்புடைய காவலர்கள் கைது செய்யபடவேண்டும். ரீல்ஸ் முதலமைச்சராக இல்லாமல் ரியல் முதலமைச்சராக இருக்க வேண்டும். படத்தில் ஹீரோவாக இருக்கலாம் ஆனால் ஆட்சி அதிகாரத்தில் இன்று ஜீரோவாக உள்ளீர்கள். பாதிக்கபட்ட குடும்பத்திற்கு உரிய நீதி வழங்கவேண்டும். தேவைப்பட்டால் திமுக நீதிமன்றத்திற்குச் செல்லும்.

இவ்வாறு அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.